தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**P102** உரைநடையும் நாடகமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. ‘கற்பகத்தை இழந்தோம்’ என யார் மறைவை திரு.வி.க குறிப்பிடுகிறார்?
2. கண்ணதாசன் உரைநடைக்கு வழங்கிய கொடை யாது?
3. நாடகங்களின் இரண்டு வகைகள் யாவை?
4. திரைக்கதை என்பதன் விளக்கம் யாது?
5. பதிப்புத் துறையில் பெரு வேந்தர் யார்?
6. கோ.வி மணிசேகரனின் உரைநடைக்கு ஊற்றுக்கண்ணாகத் திகழ்ந்தவர் யார்?
7. சங்கரதாஸ் சுவாமிகள் எந்த ஆண்டு பிறந்தார்?
8. அடிமை வாழ்வின் தன்மையைக் கூறும் கதைகள் யாவை?
9. அலிகள் பிரச்சினை பற்றிய வாடாமல்லி நாடகத்தின் ஆசிரியர் யார்?
10. சாகித்திய அக்காதெமியின் பரிசு பெற்ற மு.வ.வின் நூல் எது?
11. சிவகாமி சபதம் உணர்த்தும் தத்துவம் யாது?
12. மனோகரா எனும் நாடகத்தை இயற்றியவர் யார்?
13. கவலைக்கு மருந்தாக பாரதி எதனைக் குறிப்பிடுகிறார்?
14. பாவாணரின் உரைநடையில் உயிர் கருத்து யாது?
15. அசாம் மாநிலத்தில் வழங்கும் இசை நாடகத்தின் பெயர் யாது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. திரு.வி.க.வின் தமிழ் நடை குறித்து எழுதுக.
2. கோ.வி. மணிசேகரனின் உரைநடை வகைகளைப் பட்டியலிடுக?
3. நாடக ஆக்கத்தில் பெண்கள் குறித்து எழுதுக.
4. பாரதிதாசன் திராவிட இயக்க நாடகங்கள் குறித்து எழுதுக.
5. உ.வே.சா. குறிப்பு வரைக.
6. சொல்லாக்கம் என்றால் என்ன?
7. சங்கரதாஸ் சுவாமிகளின் சிறப்பு நாடகங்களில் எங்ஙனம் அமைகின்றது?
8. கவிதை நாடகமும் இசை நாடகமும் குறித்து எழுதுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சேதுப்பிள்ளையின் உரைநடையில் இலக்கிய நயங்கள் விவரிக்க.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகக் கூறுகள் குறித்து விளக்குக.

2. (அ) சங்கரதாஸரின் நாடக நெறிகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடைக்கு அண்ணாவின் பங்களிப்பை விவரிக்க.

3. (அ) நாடகமும் கூத்தும் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) தேசிய நாடகங்கள் குறித்து விவரிக்க.

***